# கொழும்புப் பல்கலைக்கழகம்

# கலைப்பீடம்

## முதலாம் வருடக் கலைமாணிப்பரீட்சை (பொருளியல்)

2016/2017

## இரண்டாம் அரையாண்டுப்பருவ முடிவு

## ECN: 1204 உலகப்பொருளாதார அபிவிருத்தியும் இலங்கையும்

நேரம் **இரண்டு (02)** மணித்தியாலங்கள்

**நான்கு (04)** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.

---

1.

i. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரான காலப்பகுதியிலேற்பட்ட பசுமைப்புரட்சியின் பொருளாதார விளைவுகளை நீர் எவ்வாறு விளக்குவீர்?

(12 புள்ளிகள்)

ii. "விவசாயமானது ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது".பொருத்தமான உதாரணங்களுடன் இக்கூற்றினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

(13 புள்ளிகள்)

2.

i. "உலகப் பொருளாதார வரலாற்றில் கைத்தொழில் புரட்சியானது ஒரு முக்கிய திருப்புமுனையாகக் கருதப்படுகின்றது". இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களினைத் தருக.

(13 புள்ளிகள்)

ii. ஒரு நாட்டின் கைத்தொழில் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் பிரதான காரணிகளை சுருக்கமாக அடையாளங்காண்க.

(12 புள்ளிகள்)

3.

i. பொருத்தமான உதாரணங்களுடன் றொஸ்ரோவின் (Rostow) வளர்ச்சி மாதிரியின் ஐந்து அபிவிருத்திக் கட்டங்களை விளக்குக.

(13 புள்ளிகள்)

ii. ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் வகிபாகம் பற்றி நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

(12 புள்ளிகள்)

4.

i. உலகப் பொருளாதாரம் மாற்றமுறுதலை பகுப்பாய்வு செய்கையில் நவீனத்துவக் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தினை அடையாளங்காண்க.

(12 புள்ளிகள்)

iii. குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அனுபவத்தினைப் பகுப்பாய்வு செய்வதற்கு நவீனத்துவக் கோட்பாடுகள் எந்தளவிற்குப் பொருத்தமுடையன?

(13 புள்ளிகள்)

5. "ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது கணிய ரீதியான சாதனையாக இருக்கையில் பொருளாதார அபிவிருத்தி என்பது ஒரு தர ரீதியான சாதனையாகும்."

i. பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான குறிகாட்டிகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

ii. பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் இலங்கையின் சாதனை குறித்து உமது மதிப்பீடு யாது?

(13புள்ளிகள்)

6. "நான் இலண்டன் பயணம் செய்த போது எனது முதலாவது இலங்கைக்கான விஜயம் 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்றது..........நான் கொழும்பு நகரைச் சுற்றி நடந்தேன், யுத்தத்தினால் பாதிக்கப்படாத அரச கட்டடங்களைப் பார்த்து வியப்படைந்தேன்.... சிலோன் (சிறிலங்கா) சிங்கப்பூரைக் காட்டிலும் அதிக வளங்களையும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்டிருந்தது."[லீ குவான் யூ (2000) சிங்கப்பூரின் கதை, பக்கம்.460].

i. காலஞ்சென்ற சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ இலங்கை தொடர்பாக வெளியிட்ட கருத்துப் பற்றிய உமது கருத்து யாது?

( 12 புள்ளிகள்)

ii. சிங்கப்பூரின் தலா வருமானம் 50,000 அமெரிக்க டொலருக்கும் அதிகமாகக் காணப்படுகையில் இலங்கையின் தலாவருமானம் 4,000 அமெரிக்க டொலரை விடவும் குறைவாகக் காணப்படுகின்றது. சிங்கப்பூருடன் ஒப்பிடும் போது ஏன் இலங்கை மெதுவான முன்னேற்றத்தினை அடைந்துள்ளதாகக் கருதுகின்றீர்?

( 13 புள்ளிகள்)

7. ஆசியாவிலுள்ள பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் போல பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அபிவிருத்தியை அடைவதற்கான உபாயமாகவும் இலங்கையும் இறக்குமதிப்பதிலீட்டுக் கொள்கையினை தெரிவு செய்தது.

i. றக்குமதிப்பதலீட்டுக் கொள்கை என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது என விளக்குக.

(12 புள்ளிகள்)

ii. நாட்டின் பொருளாதாரக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதில் இக்கொள்கைகள் ஏன் தோல்வியடைந்தன?

( 13 புள்ளிகள்)

8. இலங்கை 1977 இல் வர்த்தகத் தாராளமயமாக்கத்துடன் தனது பொருளாதாரத்தினை திறந்து விட்டது.

i. 1977 ற்குப்பின்னர் இலங்கை அமுல்படுத்திய பிரதான திறந்த பொருளாதாரக் கொள்கைகள் எவை?

(13 புள்ளிகள்)

ii. திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் கடந்த நாற்பது ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அடைந்து கொண்ட பொருளாதார முன்னேற்றமானது திருப்திகரமானது என நீர் கருதுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக

(12 புள்ளிகள்)

9. பல அரச கொள்கை ஆவணங்கள் குறிப்பிடுவதைப்போன்று இன்று இலங்கை பல பொருளாதார சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

i. இப்பொருளாதார சவால்கள் எவை? அவற்றில் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

ii. இச்சவால்களிலிருந்து வெற்றிகரமாக மீண்டு பொருளாதாரத்தினை நிலைபேறான முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதற்கு எவற்றினை நீர் முன்மொழிகின்றீர்?

(12 புள்ளிகள்)